33



# அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ.– பி21/ 78 IV

## 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய, 23(2) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

எம். ஏ. முனிதாச,
பதில் செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
1996 செத்தெம்பர், 13.

### கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 1996 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத் (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 1990, சனவரி 5 ஆம் தேதிய, 591/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கைத் திறந்த பல்கலைக்கழகக் கட்டளைச்சட்டம் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது :—

(அ) அதன் 4 ஆம் பந்தியின் (ஔ) என்னும் வாசகத்தை இல்லாதொழித்து அதற்குப் பதிலாகப் பின்வரும் வாசகத்தை இடுவதன் மூலம் :—

"(ஔ) ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பல்கலைக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்டவாறான அத்தகைய கற்கைக்கிளையில் அல்லது கற்கைக் கிளைகளில் ஆராய்ச்சிகளை நடாத்துவதற்கான நிதிகளையும் வேறு வசதிகளையும் ஒதுக்குதல்" ;

(ஆ) 7 ஆம் பந்தியின் 1 ஆம் உப பந்திக்குக் பதிலாக பின்வரும் புதிய உப பந்தியை இடுவதன் மூலம் :

"(1) (அ) திறந்த பல்கலைக்கழகமொன்றின் உப வேந்தர், (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, அப்பல் கலைக்கழகத்தின் பேரவையினால் விதந்துரைக்கப்பட்ட மூன்று பெயர்களைக் கொண்ட ஒரு குழாத்திலிருந்து ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் மூன்றாண்டுக் காலப் பகுதிக்கு நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) ஆளெவரும், அதே பல்கலைக்கழகத்தின் உப வேந்தராக அடுத்தடுத்துவரும் இரு காலப்பகுதிகளுக்கு மேலாக நியமிக்கப்படுதலாகாது.

(இ) திறந்த பல்கலைக்கழகத்தின் உபவேந்தர், ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையின் பின்னர் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்."

(இ) அதன் 13 ஆம் பந்தியின் (2) ஆம் உட்பந்தியின் (vii) ஆம் வாசகத்தில் "ஒலிபரப்பு" என்னும் சொல்லுக்குப் பதிலாக "தொடர்புச்சாதனம்" என்னும் சொல்லை இடுவதன் மூலம்;

(ஈ) அதன் 14 ஆம் பந்தியின் (2) ஆம் உட்பந்தியில் —

(i) "ஒராம் உட்பந்தியினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒராமுட்பந்தியினால்" என்னும் சொல்லை இடுவதன் மூலம்;

(ii) அவ்வுட்பந்தியின் (xiv) அத்துடன் (xv) என்னும் வாசகங்களில் "கற்கைப் பிரிவுகளை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கற்கைப் பகுதிகளை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் ;

(iii) அவ்வுட்பந்தியின் (xvi), (xvii) ஆகிய வாசகங்களுக்காகப் பின்வரும் புதிய வாசகங்களை இடுவதன் மூலம் :—

"(xvi) (அ) திறந்த பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்குக் கல்வித் தொழில்நுட்பவியலைத் திட்டமிடுவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் பொருத்தமான போதனை விடயப் பொருட்களின் ஆக்கத்துக்கும் கல்வித் தொழினுட்பவியல் சபையொன்றை நியமித்தல். அத்தகைய சபையின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் துணைவிதியால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) கல்வித் தொழில்நுட்பவியல் சபை பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(i) துணை வேந்தர் ;
(ii) கல்வித் தொழிநுட்பவியல் பணிப்பாளர் ;
(iii) ஒவ்வொரு துறையினதும் துறைத் தலைவர் ;
(iv) பிரதேச கல்விச் சேவைகள் பணிப்பாளர் ;
(v) நூலகப் பொறுப்பாளர் ;
(vi) கல்வித் திணைக்களத் தலைவர் ;
(vii) கல்வி தொழில்நுட்பவியல் திணைக்களத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர், II ஆந் தர ஆசிரியர்கள் அத்துடன் அதற்கு மேற்பட்ட தர ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் ;
(viii) மூதவையின் உறுப்பினர்களிடையே அதனால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் ;
(ix) ஒவ்வொரு துறைச் சபையின் உறுப்பினர்களிடையே, அதிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரொருவர்.

(இ) கல்வித் தொழில் நுட்பவியல் சபையின் செயலாளர் துணைவேந்தரின் விதப்புரையின் மீது பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) மேலே (ஆ) உள்வாசகத்தின் உள்வாசகம் (ix) இன் கீழ் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர், சிரேட்ட விரிவுரையாளர் தரம் II அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவர் தெரிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட ஒரு ஈராண்டு காலத்திற்குப் பதவி வகித்தலும் வேண்டும்.

(xvii) (அ) பிரதேசக் கல்விச் சேவைகளைத் திட்டமிடுவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும், கற்கை நடைமுறைக்குத் தேவைப்படும் மூலவளங்களுக்கான ஏற்பாடு செய்வதற்கும், பிரதேசக் கல்விச் சேவைகள் சபையொன்றை நியமித்தல்.

அத்தகைய சபையின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் துணைவிதியால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) பிரதேசக் கல்விச் சேவை சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் —

(i) துணை வேந்தர் ;

(ii) பிரதேசக் கல்விச் சேவைப் பணிப்பாளர்கள் ;

(iii) ஒவ்வொரு துறையினதும் துறைத் தலைவர்;

(iv) கல்வித் தொழில்நுட்பவியற் பணிப்பாளர் ;

(v) நூலகப் பொறுப்பாளர் ;

(vi) பதிவாளர் ;

(vii) நிதியாளர் ;

(viii) பணிப்பாளர்/செயற்படுத்தல் ;

(ix) தரவு முறைப்படுத்தல் முகாமையாளர் ;

(x) மூதவைச் செயலாளர் ;

(xi) பிரதேசக் கல்விச் சேவை உதவிப் பணிப்பாளர் ஒவ்வொருவர் ;

(xii) பிரதேச நிலையத்திற்குப் பொறுப்பான ஆள் ஒவ்வொருவர் ;

(xiii) ஒவ்வொரு துறைச் சபையின் உறுப்பினர்களிடையே, அதனால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் ;

(xiv) துறையின் ஒவ்வொரு உதவிப் பதிவாளர்.

(இ) பிரதேச கல்விச் சேவை சபையின் செயலாளர், மேலே உள்வாசகம் (ஆ) வின் (xi) அத்துடன் (xii) ஆகிய உள்–உள் வாசகங்களின் கீழ், ஆட்களிடையே துணை வேந்தரின் விதப்புரையின் மீது, பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) மேலே உள் வாசகம் (ஆ) வின் (XIII)உள்–உள் வாசகத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் சிரேட்ட விரிவுரையாளர் தரம் II அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தைச் சேர்ந்தவராதல் வேண்டும் என்பதுடன் அவர் தெரிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட ஒரு ஈராண்டு காலத்துக்குப் பதவி வகித்தலும் வேண்டும்."

(உ) அதன் 15 ஆம் பந்தியில் -

(i) அப்பந்தியின் வாசகம் (2) ஆம் உட்பந்தியின் வாசகம் (v) யை இல்லாதொழித்து, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வாசகத்தை இடுவதன்மூலம் :–"(v) ஒவ்வொரு கற்கைப் பகுதித் தலைவரும்" ;

(ii) அதன் (2) ஆம் உட்பந்தியின் (vii) ஆம் வாசகத்தில் "அத்துடன்"; என்னும் சொல்லை நீக்குவதன் மூலம் ;

(iii) அதன் (2) ஆம் உட்பந்தியின் (viii) ஆம் வாசகத்தை (ix) என மீள இலக்கமிடுவதன் மூலம் அத்துடன்

(iv) அதன் (2) ஆம் உட்பந்தியின் (vii) ஆம் வாசகத்தை உடனடுத்துப்பின்னர் பின்வரும் புதிய வாசகத்தை உட்புகுத்துவதன் மூலம் :–

பிரதேசக் கல்விச் சேவைகள் பணிப்பாளர் ; அத்துடன்"

(v) அதன் (6) ஆம் உட்பந்தியின், (vii) ஆம் வாசகத்தை இல்லாதொழித்து, இதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வாசகத்தை இடுவதன் மூலம் —

"(vii) தகுந்ததென மூதவை கருதக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினவான மூதவையினது நிலையியற் குழுக்களை நிமித்தக் குழுக்களை, அல்லது சபைகளை நியமித்தலும் அத்துடன் குறிப்பாக —

(அ) நூலக அத்துடன் தகவல் சேவைக்குழு ;

(ஆ) அனுமதிப்புக் குழு ;

(இ) பாடவிதானம், நிகழ்ச்சித்திட்ட அபிவிருத்திக் குழு ;

(ஈ) பாடவிதானம் மதிப்பீட்டுக் குழு ;

(உ) பட்டமளிப்புக் குழு ;

(ஊ) துணைவிதிக் குழு அத்துடன்;

(எ) ஒரு தகுதிகாண் காலக் கற்கை விடுமுறைக் குழு.

ஆகியவற்றை நியமித்தலும், அவற்றின் அலுவல் நியதிகளைக் குறித்துரைத்தலும், அவற்றின் அறிக்கைகளைச் சீர்தூக்கிப்பார்த்தலும், அத்தகைய அறிக்கைகளை திரிபுகளுடனோ அல்லது திரிபுகளின்றியோ ஒன்றில் அங்கீகரித்தலும் அல்லது அத்தகைய அறிக்கைகளை நிராகரித்தலும்."

(ஊ) அதன் 16 ஆம் பந்தியில்

(i) இரண்டாம் உட்பந்தியில் "கற்கைப் பிரிவுகள் ;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கற்கைப் பகுதிகள் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

(ii) மூன்றாம் (4) ஆம் உட்பந்திகளை இல்லாதொழித்து அதற்குப் பதிலாக பின்வரும் புதிய உட்பந்திகளை இடுவதன் மூலம் :-

"(3) இயற்கை விஞ்ஞான பீடம் பின்வரும் கற்கைப் பகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும் -

(i) தாவரவியல் ;

(ii) இரசாயனவியல் ;

(iii) சுகாதார விஞ்ஞானம் ;

(iv) கணிதம் ;

(v) பௌதிகவியல் ;

(vi) விலங்கியல் ;

(vii) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கக்கூடியவாறான வேறு எவையேனும் பகுதிகள்.

(4) பொறியியல் தொழினுட்பவியல் பீடம் பின்வரும் கற்கைப் பகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :–

(i) விவசாயம் மற்றும் பெருந்தோட்டப் பொறியியல் ;

(ii) குடியியற் பொறியியல் ;

(iii) மின்சாரக் கணனிப் பொறியியல் ;

(iv) கணிதமும் பொறியியல் தத்துவமும் ;

(v) எந்திரப் பொறியியல் ;

(vi) புடவைத் தொழினுட்பவியல் ; அத்துடன்

(vii) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கக்கூடியவாறான வேறு எவையேனும் பகுதிகள்''

(viii) அதன் (5), (6), (7) ஆம் உட்பந்திகளில் ''பிரிவு'' என்னும் சொல் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் ''பகுதி'' என்னும் சொல்லை இடுவதன் மூலம்.''

(எ) அதன் 17 ஆம் பந்தியின் (iii) ஆம் வாசகத்தில் ''துறைத்தலைவர் ஒருவர் நியமிக்கப்படுதலும் வேண்டும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''துறைத்தலைவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுதலும் வேண்டும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் ;

(ஏ) அதன் 18 ஆம் பந்தியில் —

(i) அதன் (1) ஆம் உட்பந்தியில் ''கற்கைப் பிரிவுகள்'' என்னும் சொற்களுக்குப்பதிலாக ''கற்கைப் பகுதிகள்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் ;

(ii) அதன் (2) ஆம் உட்பந்தியின் (ii) அத்துடன் (iv) ஆம் வாசகங்களை இல்லாதொழித்து பின்வரும் வாசகங்களை, முறையே இடுவதன் மூலம் :—

''(ii) கல்வித் தொழினுட்பவியற் பணிப்பாளர் அல்லது அவரது நியமித்தர் அவர் கல்வித் தொழினுட்பவியல் சபையின் உறுப்பினரொருவராக இருத்தல் வேண்டும் ;

''(iv) துறையின் நிரந்தர விரிவுரையாளர்கள் அத்துடன் உதவி விரிவுரையாளர்களிடையேயிருந்து அவர்களினால் தெரிவு செய்யப்படும் இரண்டு உறுப்பினர்கள் ;''

(iii) அதன் (2) ஆம் உட்பந்தியின் (vi) அத்துடன் (vii) ஆகிய வாசகங்களுக்கு முறையே (viii) அத்துடன் (ix) ஆம் வாசகங்கள் என மீள இலக்கமிடுவதன் மூலம் ;

(iv) அதன் (2) உட்பந்தியின் (v) ஆம் வாசகத்தை உடனடத்துப் பின்னர் பின்வரும் புதிய வாசகங்களை உட்புகுத்துவதன் மூலம் ;

''(vi) பிரதேசக் கல்விச் சேவைப் பணிப்பாளர் அல்லது அவரது நியமித்தர். அவர் பிரதேச கல்விச் சேவை சபையின் உறுப்பினரொருவராக இருத்தல் வேண்டும் ;

(vii) நூலகப் பொறுப்பாளர் அல்லது அவரது நியமித்தர் ;''

(v) அதன் (2) ஆம் உட்பந்தியின் மீள் இலக்கமிடப்பட்ட (viii) ஆம் உள் வாசகத்தில் ''மூன்று ஆட்கள்'' என்னும் சொற்களிலிருந்து அவ்வாசகத்தின் முடிவுரை இல்லாதொழித்து அதற்குப் பதிலாக ''ஏழு பேர்களுக்கு மேற்படாத ஆனால் மூவருக்குக் குறையாத ஆட்கள்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் ;

(vi) அதன் (3), (4) ஆம் உட்பந்திகளை முறையே (4) (5) ஆம் உட்பந்திகளாக மீள இலக்கமிடுவதன் மூலம் ;

(vii) அதன் (2) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்னர், பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலம் ;

''(3) (i) இரண்டாம் உட்பந்தியின் (ix) ஆம் வாசகத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர், தேர்ந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்பட்ட ஓராண்டு காலத்திற்கு உறுப்பினரொருவராக பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் வேறு எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், அவரது தேர்வுத் தேதியிலிருந்து கணிக்கப்பட்ட ''மூன்று ஆண்டுக் ''காலமொன்றுக்குப் பதவி வகித்தலும் வேண்டும்., அத்துடன் மீளத் தெரிவுசெய்யப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(ii) இரண்டாம் உட்பந்தியின் (ix) ஆம் வாசகத்தின் கீழ்த் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், இக்கட்டளைச் சட்டத்தின் 17 ஆம் பந்தியின் (1) ஆம் உட்பந்தியின் கீழ் துறைத் தலைவரின் தேர்தல், பரீட்சைகளும் அவற்றோடு தொடர்புபட்ட கருமங்களும் தொடர்பில் துறைச் சபையின் ஏதேனும் கூட்டத்தின் நடவடிக்கைகளிலிருந்தும், விலக்கி வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் கூட்டமானது அத்தகைய விலக்கிவைப்புகள் எவ்வாறு இருப்பினும், முறையாக நடாத்தப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.''

10–307

## 1969 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம்

50 (1) பிரிவின் கீழான காணி கொள்ளுதற் கட்டளை

1969 ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 50(1) பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கிளெமென்ட் விக்ரர் குணரத்ன ஆகிய நான், கைத்தொழில்களின் நன்மை கருதி கைத்தொழிற் பேட்டையொன்றைத் தாபித்துப் பேணிவருதற்காக, இதற்கான அட்டணையில் குறித்துரைக்கப்பட்ட காணி கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்குக் கிடைக்கத்தக்கதாக இருப்பதை இயலச் செய்வதற்கென, சொல்லப்பட்ட காணியைக் கொள்ளுவதற்கான கட்டளையை இத்தால் அங்கீகரிக்கின்றேன்.

சீ. வீ. குணரத்ன,
கைத்தொழில் அபிவிருத்தி,
அமைச்சர்.

1996 புரட்டாதி மாதம் 18 ஆம் நாளாகிய இன்று,

### அட்டவணை

காலிப் பகுதிக்குப் பொறுப்பாகவுள்ள நிலஅளவைகள் கண்காணிப்பாளர் நிஹால் குணவர்தனவினால் தயாரிக்கப்பட்ட 93.4.30 ஆந் தேதிய 2535 ஆம் இலக்க வரைபடத்தில் 02ஆம் இலக்கக் காணித்துண்டம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதும், கரன்தெனிய தேர்தல் மாவட்டத்தில், கரன்தெனிய உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கொசதுமனன கிராமத்தில் அமைந்துள்ளதும், பின்வருமாறு எல்லையிடப்பட்டதும், 0.9403 ஹெக்டெயர் பரப்பளவு கொண்டதுமான காணித்துண்டியாவும் :

| | | |
|---|---|---|
| வடக்கு | : | இல.1330 காலி பூர்வாங்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 02 ; |
| கிழக்கு | : | இல.2535 காலி பூர்வாங்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 03 ; |
| தெற்கு | : | இல.2535 காலி பூர்வாங்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 01 ; |
| மேற்கு | : | இல.1330 காலி பூர்வாங்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 02. |

10–369/ 1